குறுந்தொகையில் மருதத்திணை மலர்கள்

முனைவர் பெ. அசோக்குமார்
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சிவகாசி
DOI: https://doi.org/10.5281/zenodo.19220449

முன்னுரை

சங்க இலக்கியமான குறுந்தொகையில் குறிப்பிடப்படும் மருதத்திணை இயற்கையோடு இயைந்து காணப்படும். மருதத்திணையில் வயல் சார்ந்த நிலத்தில் பல்வகையான மலர்கள் மலர்ந்து காணப்பட்டன. அவ்வகை மலர்களை ஒன்றின் பின் ஒன்றாக அடுக்கிக் கூறப்பட்டுள்ளன. அம்மலர்கள் பெறும் அறிவியல் தன்மையும் உணர்த்தப்பட்டுள்ளன. இவற்றை விளக்கும் முகமாக இவ்வியல் அமைகிறது.

மருதத்திணையில் மலர்களின் எண்ணிக்கை

மருதத்திணைப் பாடல்களில் உள்ள மலர்கள் பின்வருமாறு. அவை,

1. *ஆம்பல்*
2. *கரும்பு*
3. *காஞ்சி*
4. *குவளை*
5. *செங்காந்தள்*
6. *ஞாழல்*
7. *தாமரை*
8. *நெருஞ்சி*
9. *நெய்தல்*
10. *பகன்றை*
11. *புன்கம்*
12. *மருதம்*
13. *முல்லை*

கூற்றுப் பாடல்கள்

மலர்கள் பற்றிய குறிப்புக் காணப்படுகின்ற 16 பாடல்களும் நால்வர் கூற்றுகளாக அமைந்ததாகும். அவை,

1. *தலைவன் கூற்று*
2. *தலைவி கூற்று*
3. *தோழி கூற்று*
4. *பரத்தையக் கூற்று*

என்பதாகும்.

மலர்களின் பயன்பாடு

மலர்களின் பயன்பாடு சங்க காலம் தொட்டே இருந்து வருகின்றன. மருதத் திணையில் மலர்களின் பயன்பாட்டைப் பற்றி புலவர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனர். இம்மலர்கள் உவமைக்காகவும், தலைவன், தலைவி, தோழி, பரத்தை இவர்களின் மனநிலையைப் புலப்படுத்துவதற்கும், புலவனின் மனநிலையை அறிவதற்கும், அறிவியல் தன்மையை அறிவதற்கும் பயன்படுத்தப்பட்டிருந்தன.

முல்லை மலர்

"ஒளியையுடைய முல்லை மலரின் மணம் கமழும் பலவாய கூந்தலையுடையவள் தலைவி, எனத் தலைவியின் கூந்தலின் பெருமையைப் பற்றி தன்நெஞ்சிற்குக் கூறியதை,

"பூ இடைவைத்தலை போலப் புல்லென்று
இணை மதி வாழியர் நெஞ்சே! மனை மரத்து
எல்லுறும் மௌவல் நாறும்
பல் இருங்கூந்தல் யாரளோ நமக்கே"

(குறுந். 19இ 2-5)

என்ற பாடலடிதலைவனின் மனநிலையை உணர்த்துகிறது.

ஆம்பல் மலர்

"ஆம்பல் மலரின் குவிந்த சிறகையுடைய குருவி தன்கூட்டில் குடும்பத்துடன் இருப்பதை பார்த்துச் சென்றதலைவன் நாட்டிலும் குருவி இருந்திருந்தால் அவன் அதனைக் கண்டு வருவான் எனத் தலைவி மனதில் எண்ணியதை தோழியிடம் கூறியதை,

"ஆம்பற் பூவின் சாம்பல் அன்ன
கூம்பிய சிறகர் மனைஉறை குரீஇ
முன்றில்உணங்கல் மாந்திஇ மன்றத்து
எருவின் நுண்தாதுகுடைவன ஆடி"

(குறுந். 46இ 1-4)

என்ற பாடலடி உணர்த்துகிறது.

ஞாழல் மலர்

"ஞாழல் மலர், மருத மலர், நெகிழ்வு, தன்னைத் தலைவன் புறக்கணித்தல் என் தோள் மெலிந்து எனத் தலைவி எண்ணி மனம் வருந்தியதை,

"ஐயவி அன்ன சிறுவீஞாழல்
செவ்வி மருதின் செம்மலொடுதாஅய்த்
துறைஅணிந்தன்றுஅவன் ஊரே இறை
இறந்து"

(குறுந். 50இ 1-3)

என்ற பாடல்வரி உணர்த்துகின்றன.

நெருஞ்சி மலர்

"நெருஞ்சியின் புதுமலர், கண்ணுக்கு இனிமை தருவதாய் இருப்பினும், அதன் முட்கள் துயர் பொறிக்கும் ஊறு செய்வதாகவேஉள்ளது.தலைவன்நெருஞ்சி மலர் போல் இருந்தாலும் அவனின் செயல்கள் நெருஞ்சி முள்ளாக இருந்து என் ஐம்பொறியையும் வருத்துகிறது என தலைவிகூறுவதை,

"ம்இ என்நெஞ்சே! என்நெஞ்சே!
புன்புலத்துஅமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்கின் புதுமலர் முட்டபயந்தாஅங்கு"

(குறுந். 202இ 1-3)

என்ற பாடலடிவிளக்குகிறது.

கரும்பு மலர்

"இனிமையான கரும்பின் மலர்களில் மெல்லிய இதழைத்தேர்ந்தெடுக்கும்குருவிச் சேவலுக்கு உரிய இனிமையும், அன்பும் தன்காதலனிடம் இல்லாமை எண்ணித் தலைவி வருந்தினாள்எனத் தோழி மனதில் எண்ணிக்கூறியதை,

"தேம் பொதிக்கொண்டை தீம் கடைக் கரும்பின்
நாறாவெண்பூக்கொடுநும்
யாணர் ஊரன் பாணன்வாயே"

(குறுந். 85இ 4-6)

என்ற பாடலடிவிளக்குகிறது.

காஞ்சி மலர்

"தலைவன் செய்த தவறை மன்னித்ததால் காஞ்சி மலரின் மென்மை கொண்ட தலைவியை தாய் என்று தோழி புகழ்ந்தாள். தலைவி உயர்ந்த பண்பு கொண்டவளாக உள்ளதைஎண்ணி மகிழ்ந்தாள்என்பதை,

"உழவர் வாங்கிய கமல்பூ மென்சினைக்க்
காஞ்சி ஊரான்கொடுமை
கரந்தனள் ஆகலின் நாணிய வருமே"

(குறுந். 10இ 3-5)

என்ற பாடல்வரி உணர்த்துகின்றன.

குவளை மலர்

"செங்கழுநீரான குவளை மலர் கொண்ட ஆற்றங்கரைப் பொழிலைத் தலைவியைச் சந்திக்கும் குறியிடமாகத் தலைவனிடம் கூறுவதிலிருந்து தலைவன், தலைவி காதலைப் பற்றி எண்ணுவதை,

"துன்னல் போனென்றாய்இபொழிலே˙
யாம்எம்
கடைக்குஎருவணம் கொணர்க்கம் சேறும்
ஆண்டும் வருவன் பெரும் பேதையே"

(குறுந். 113இ 4-6)

என்ற பாடலடிவிளக்குகிறது.

தாமரை மலர்

"தாமரை மலர் தோழியின் மனநிலையை குறிக்கும் குறுந். 127இ 384 என்ற

இப்பாடல்கள் கூறப்பட்டுள்ளன. சான்றாக, தாமரை மலரின் தேனை உண்டு சுவைத்தவண்டு உருந்தின் மலரை அடைந்து சுவை இல்லாமல் திரும்புவதுதலைவன், தலைவியின் அன்பைப் பெற்று பின் பரத்தைய பின் அன்பைப் பெற முடியாமல் திரும்புவதைக் குறிக்கும். தலைவனின் இழிசெயலை வண்டோடு ஒப்பிட்டுக் கூறுவதை,

"உருந்துடைக் கழுநீரன்
கரும்புடைப் பணைத்தோள்"

(குறுந். 384இ 1-2)

என்ற இப்பாடலடி வெளிப்படுத்துகின்றது.

நெய்தல் மலர்

"தன்னைக் கைவிட்ட வயல் களிலேயே மீண்டும் மலரும் கூடிய தன்மையையுடைய நெய்தல் மலரை ஒத்துதலைவனின்தவறான செயலை தலைவி வருந்து அவன் வரும் போது ஏற்று மீண்டும் இல்லறம் நடத்தியதைத் தோழிகூறுவதை,

"கொடியோர் நிலம் பெயர்ந்து
உறைவேம் என்னாது,
பெயர்ந்தும் கடிந்த செறுவில் பூக்கும்
நின் ஊர் நெய்தல்அனையேம் - பெரும!"

(குறுந். 309இ 4-6)

என்ற இப்பாடலடி உணர்த்துகின்றன.

முடிவுரை

"சங்க இலக்கியமான குறுந்தொகையில் மருததிணை என்ற நிலத்தில் மலரக்கூடிய மலர்களைக் குறிப்பிட்டுப் பாடல்களைப் புனைந்துள்ளனர். இயற்கைத்தன்மை இவ்விலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மக்களின் மனநிலயை அம்மலர்கள் ஒத்துப் போகக் கண்டதால் புலவர்கள் அதனை தங்களது இலக்கியத்தில் தலைவன், தலைவி, தோழி என்ற படைப்புகளோடு பொருத்தி அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

பார்வை நூல்

1. நாகராசன். வி. (உ.ஆ) -குறுந்தொகை, தொகுதி 1 மற்றும் தொகுதி 2, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை, முதற்பதிப்பு - 2007.